www.tamilarangam.net

# Tamils Rehabilitation Organisation
# தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

Th. N. Srigengatharan
Secretary
Mahajana College OSA

19.07.1999

அன்புடையீர்,

**அனைத்துத் தமிழ்ப் பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்களும் தமிழர் புனர்வாழ்வுக்கழமும் இணைந்த கலந்துரையாடல்**

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் "துயர்துடைப்பு" நடவடிக்கை 5.7.99 அன்று தொடங்கி நடை-பெற்று வருவது யாவரும் அறிந்ததே.

இலங்கையில் வடகிழக்கில் இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சனைகளுக்கு தாயகத்தில் தமிழர்புனர்வாழ்வுக்கழகம் பல்வேறு நிவாரண உதவிகளை மேற்கொணடு வருகின்றது. இதற்கு உதவிக்கரம் கொடுக்கும் நோக்குடன் 24.01.99 அன்று பிரித்தானியாவில் இயங்கி வரும் சகல தமிழ் அமைப்புக்களையும் அழைத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பிரித்தானியக் கிளை ஒரு கலந்துரையாடலை நடாத்தியது.

சுமார் 50 இற்கும் அதிகமான அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டு நேரடியாகவும், வரமுடியாதவர்கள் கடிதம் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு தமிழர் புனர்வாழ்வுக்கழக த்தின் இத்துயர் துடைப்பு நடவடிக்கைகளுக்கு பல்வேறு வழிகளில் அளித்துள்ள ஆதரவு களும் கருத்துக்களும் இன்று வன்னி வாகரை வாழ் இடம் பெயர்ந்த மக்களின் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு நன்மைகளாகப் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன.

எமது அடுத்த கட்ட நடவடிக்கையாக பிரித்தானியாவில் இயங்கி வரும் சகல தமிழ் அமைப்புக்களையும் தனித்தனியாகச் சந்தித்து வருகின்றோம்.இதற்கமைய சகல பழைய மாணவர் சங்கங்களையும் எமது கழகம் அழைத்து ஒரு கலந்துரையாடலை நடாத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இக்கலந்துரையாடல் வரும் 7.8.99 சனிக்கிழமை அன்று தமிழர் புனர்வாழ்வுக்கழக தற்போதைய நடவடிக்கைக் காரியாலயத்தில் மாலை 5 மணியளவில் நடைபெறும். உங்கள் சங்கத்தின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட இருவரை இக்லந்துரையாடலில் கலந்து கொள்ள வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கூட்டம் நடைபெறும் இடம்:

**520 FOREST ROAD, WALTHAMSTOW, LONDON E17**

இப்படிக்கு

[signature]
க.குகன்
இணைப்பாளர்

[signature]
ச.இராஜ்கோபால்
திட்ட இணைப்பாளர்

0181-384 1965

Registered Office:79, Hoe Street, Walthamstow, London E17 4SA U.K.
Tel: 0181 - 520 5876
U.K. Registered Charity No. 1010029

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்